3rd August 1966]

தங்கக் கட்டுப்பாடு விதிகள்

* 44 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாடு சட்டத்திற்குப்பின், 1-10-1964 முதல் வேலை கோரிப் பதிவு செய்த நகைத் தொழிலாளர் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேர் வேலை பெற்றிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) Up to 30th April 1966—831.

(b) 338.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், வேலை பெற்றிருப்பவர்களில், சர்க்கார் நிறுவனங்களில் எத்தனை பேர் ? தனியார் நிறுவனங்களில் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

* 45 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்ட விதிகள் அடங்கிய மத்திய சர்க்கார் விசேஷ கெஜட்டின் (Part II)— செக்ஷன் 3—சப்-செக்ஷன் a (i) தேதி, 7-2-1966) பிரதி இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்விதிகளின்மீது ராஜ்ய அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு ஏதேனும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறதா ?

(உ) அவ்விதிகளின் நகல் ஒன்று மேஜையின்மீது வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) As the draft rules have been published by the Government of India, there is no need to place a copy of the draft rules on the table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், மத்திய சர்க்கார் பிறப்பித்திருக்கக்கூடிய இந்த விதிகளில் ஒரு தனிப்பட்ட தங்க வேலை செய்யும் தொழிலாளி ஏக காலத்தில், ஒரு நேரத்தில் வேலை செய்ய 100 கிராமுக்கு அதிகமாக வைத்துக்கொள்ளக் கூடாது என்று தெளிவாக இருக்கிறதா? தன்னிடத்தில் வைத்துக்கொள்ளக் கூடியது 100 கிராமுக்கு அதிகமாக இருக்கலாம், ஆனால், வேலை செய்ய எடுத்து வைத்துக்கொள்ளுவது 100 கிராமுக்கு மேல் இருக்கக்கூடாது என்று விதியா என்று சொல்ல முடியுமா ?